# ශ්‍රී ලංකා

# இலங்கை

සමරු
නිකුත්කිරීම
ஞாபகார்த்த வெளியீடு

මුද්දර නිවේදන අංක
முத்திரைச்
செய்தித்தாள் இல. } 56

# ශ්‍රීමත් පොන්නම්බලම් අරුණාචලම්

## சேர். பொன்னம்பலம் அருணாசலம்

1977. 03. 10

මුද්දර කාර්යාංශය
முத்திரைப் பணியகம்

තැපැල් සහ විදුලි සංදේශ දෙපාර්තමේන්තුව
அஞ்சல் தொலைத் தொடர்புத் திணைக்களம்

මුද්දර නිවේදන අංක 56

තැපැල් සහ විදුලි සංදේශ අමාත්‍යාංශය,
ආදිපාද වීදිය,
කොළඹ 1.
1977.03.10

පොන්නම්බලම් අරුණාචලම් ශ්‍රීමතාණෝ සිය රට වැසියන් වෙනුවෙන් නොයෙක් ක්ෂේත්‍රයන්හි ලා මාර්ග දර්ශකයකු වශයෙන් ක්‍රියා කළහ. හෙතෙම විවෘත තරඟ විභාගයෙන් ලංකා සිවිල් සේවයට පිවිසියා වූත්, රාජකීය ආසියාතික සංගමයේ (ලංකා ශාඛාව) සභාපති වශයෙන් තෝරා පත් කරනු ලැබුවා වූත්, ප්‍රථම ලාංකිකයා විය. ලංකා විශ්ව විද්‍යාල සංගමයේ ද ලංකා ප්‍රතිසංස්කරණ සංගමයේ ද ලංකා ජාතික සංගමයේ ද ලංකා සමාජ සේවා සංගමයේ ද ලංකා කම්කරු සුභ සාධක සංගමයේ ද ලංකා කම්කරු සමිති සම්මේලනයේ ද ප්‍රථම සභාපතිවරයා වූයේත් ඔහුය. ලංකා විශ්ව විද්‍යාලයක් පිහිටුවීම, අප පාසල්වල ස්වභාෂාව, දේශීය ඉතිහාසය සහ භූගෝල විද්‍යාව ආරම්භ කිරීම, දේශපාලනමය නිදහස සහ සමාජයේ අඩු වරප්‍රසාද ලත් කොටස්වල අයිතිවාසිකම් පිළිගැනීම යන මේ ව්‍යාපාරවල පෙරටුව සිටියේ ඔහුය.

වර්ෂ 1853 සැප්තැම්බර් මස 14 වැනි දින කොළඹ දී මෙලොව එළිය දුටු අරුණාචලම් මැතිතුමා රාජකීය විද්‍යාලයේ ප්‍රාරම්භය වූ රෝයල් ඇකඩමියේ ද කේම්බ්‍රිජ්හි ක්‍රිස්තු විද්‍යාලයේ ද ශාස්ත්‍රෝද්ග්‍රහණය කළේය. සිය උපාධිය ගැනීමෙන් අනතුරුව ඉංග්‍රීසි නීතිඥ මණ්ඩලයට ඇතුළත් වන ලදුව 1875 දී ලංකාවට පෙරළා පැමිණි හෙතෙම විවිධ අධිකරණ සහ පරිපාලන තනතුරුවල සේවය කළේය. 1913 දී රජයේ සේවයෙන් විශ්‍රාම ලැබූ ඔහුට සිවිල් සේවකයෙකු වශයෙන් ඉටුකළ ස්වකීය සම්භාවනීය සේවාවන් වෙනුවෙන් නෛට් පදවියක් පිරිනැමිණි.

ඉන්පසු, හෙතෙම දේශපාලනමය, ආධ්‍යාපනික සහ සමාජමය සටන උදෙසා සිය බල ශක්තීන් වැඩි වැඩියෙන්

කෙළේවිය. 1915 දී ලංකා සමාජ සේවා සංගමය ද 1917 දී ලංකා ප්‍රතිසංස්කරණ සංගමය ද ඔහු විසින් සමාරම්භ කරනු ලැබිණ. ජාතික දේශපාලනමය සංවිධානයක් පිහිටුවාලීම සඳහා, 1919 දී සීමිත අරමුණු සහිත විවිධ දේශපාලන කණ්ඩායම් එක් රැස් කොට ලංකා ජාතික සංගමය ඇරඹූ ඔහු, එහි ප්‍රථම සභාපති වශයෙන් ඒකච්ඡන්දයෙන් තෝරා පත් කරනු ලැබීය. මෙරටෙ පළමු වැනි කම්කරු සමිතිය වශයෙන් හැඳින්වෙන ලංකා කම්කරු සමිති සම්මේලනය ඔහු විසින් එම වර්ෂයේදීම පිහිටුවනු ලැබිණි. ඒ හෙයින්, ඔහු ශ්‍රී ලංකාවේ වෘත්තීය සංගම් ව්‍යාපාරයේ පියා වශයෙන් ද සැළකිය හැකිය.

එහෙත්, ඇතැම් විට, ඔහුගේ හදවතට ඉතාම ප්‍රිය වූ සද්ධකාර්ය වූයේ, සිය නායකත්වයෙන් යුත් ශ්‍රී ලංකාවේ විශ්ව විද්‍යාලයක් පිහිටුවාලීමේ ව්‍යාපාරයයි. 1906 දී විශ්ව විද්‍යාල සංගමය පිහිටුවීමට තුඩු දුන් මහජන රැස්වීමේ මුලසුන හෙබ වූ හෙතෙම උද්යෝගීමත්ව ශ්‍රී ලංකාව... නොනවත්වාම ගෙන ගියේය. 1924 දී ඔහු කාලක්‍රියා කළ අවස්ථාවේ දී ලංකා විශ්ව විද්‍යාලයේ ප්‍රථම ප්‍රධානාචාර්යවරයා වූ, මහාචාර්ය මාර්ස් මෙසේ පැවසීය: "රටේ දේශපාලනමය ප්‍රගතියේ පරම වැදගත්කම ගැන මෙතරම් පැහැදිලි සංකල්පයක් ඇතිව හෝ මුළු සිතින් සහ මෙවැනි උද්‍යෝගයකින් යුක්තව හෝ විශ්ව විද්‍යාලය යට පක්ෂව වේගයෙන් කථා කර ඇති වෙන පුරුෂයෙක් මේ දිවයිනේ නම් නොමැතිය."

අරුණාචලම් මැතිතුමා විශිෂ්ට පඬිරුවනක් ද විය. තිස්වැනි වයස්වල පසුවෙද්දී සෙන්පති ඕල්කට්තුමන් ඔහු ගැන විස්තර කළේ මෙසේය :—

"ආසියාවේ අපට හමු වූ ඉතාම ධීමත්වූත් විනීතවූත් පුරුෂයන්ගෙන් කෙනෙකි." 1901 පැවැත්වුණු සංගණනය පිළිබඳ සිය වාර්තාව ලන්ඩන් 'ටයිම්ස්' පත්‍රයේ විස්තර කරනු ලැබුයේ, "ලංකා මානව වංශ විද්‍යාව සහ එහි ජනතාවන්, සිය ඉතිහාසය, සිය සමයයන්, සිය භාෂාවන් සහ සාහිත්‍ය ද පිළිබඳව විශ්වාසවන්ත තොරතුරු

සුපශන පුවල්තම කෘතියක්'' ලෙසයි. ඔහුගේ 'ලංකා ඉතිහාසය පිළිබඳ ලුහුඬු සටහන්' (1906) යන ග්‍රන්ථය, එවකට පාසල් විෂය මාලාවෙන් බැහැර කොට තුබූ විෂයයක් කෙරෙහි ඇල්මක් ඇති කරවීමට දූරු පුරෝගාමී ප්‍රයත්නයක් වූ අතර, ''ලංකා සිවිල් නීති සම්පිණ්ඩනය'' (1910) සංග්‍රහයක් සඳහා පදනමක් වශයෙන් අප නීති පද්ධතියේ විසුරුනු කරුණුවල සංක්ෂිප්ත පුනර් ප්‍රකාශයක් විය.

ජනතාවගේ දේශපාලනමය, සමාජමය හා ආර්ථික දියුණුව උදෙසා ජනතා සමිති සංවිධානය කරනු වස්, එෆ්. ආර්. සේනානායක මැතිතුමන් සහ තමන් විසින් ද කැඳවනු ලැබූ සමුළුවකදී, හෙතෙම 1919 වර්ෂයේ දී සිංහලයෙන් දේශනයක් පැවැත්වීය. ලංකා මහජන සභාව ප්‍රතිෂ්ඨාපනය කරලීමට තුඩු දුන්නේ මෙම ව්‍යාපාරයයි.

එතුමා විදේශීය හා දේශීය ප්‍රකාශනවලට ද ව්‍යක්ත ලිපි සැපයීය. නිදර්ශනයක් වශයෙන් 'මැන්චෙස්ටර් රිවිව්' හි (1902) 'ලූමිනස් ස්ලීප්' හෙවත් 'දීප්තිමත් නින්ද' ජ. රයිට්ගේ 'ලංකාව පිළිබඳ විසිවැනි සිය වසේ හැඟීම්' (1907) යන කෘතියේ 'ජනගහනය දිවයිනේ ජාතීන්, ආගම්, සාහිත්‍යය සහ සිරිත්' යන මේවා දැක්විය හැකි අතර 'කන්ද උඩරට පළාත්' (1910) 'පොළොන්නරුවේ ලෝකඩ රූප සහ සිව නැමදීම සහ සංකේත වාදය' (1915) ඔහු නොසැලෙන ඇල්මක් දැක් වූ. පූජනීය වස්තුවක් වන 'කතරගම දෙවියෝ, මුරුග නැතහොත් ස්කන්ද වන්දනය' (1924) යන ලිපි ද රාජකීය ආසියාතික සංගම් (ලංකා ශාඛාව) සඟරාවේ පළ කරනු ලැබිණි. ස්වකීය මිත්‍රයා වූ එෆ්. එල්. වුඩ්වර්ඩ් භවතුන්ගේ 'ධම්මපද' (1921) පරිවර්තනයේ ප්‍රස්තාවනාවද ඔහු අතින් ලියැවුණකි.

අරුණාචලම් ශ්‍රීමතාණෝ 1924 ජනවාරි මස 09 වැනි දින අවසන් හුස්ම හෙළුහ. 1930 දී පාර්ලිමේන්තු භූමියේ

පිහිටුවනු ලැබූ ප්‍රථම පිළිරුව ඔහුගේ විය. කොළඹ විශ්ව විද්‍යාලයයේ පළමුවැනි නේවාසිකාගාරය ද පේරාදෙනිය විශ්ව විද්‍යාලයයේ ප්‍රථම නේවාසික ශාලාව ද ඔහුගේ නමින් පිහිටුවනු ලැබිණ. සිය සොහොයුරු වූ සර් පොන්නම්බලම් රාමනාදන් සහ සිය පළමුවැනි ඥාති සහෝදර ආචාර්ය ආනන්ද කේ. කුමාරස්වාමි ශූරීන් විසින් ද බ්‍රිතාන්‍ය පාලනයේ සමෘද්ධි සමයේදී රටේ දේශපාලනමය සහ සංස්කෘතික උන්නතිය උදෙසා ඉටු කරනු ලැබූ සේවාවන් වෙනුවෙන් ශ්‍රී ලංකාව ඔවුනට අතිශයින් කෘතඥවන්නීය.

## කාර්මික විස්තර

| | | |
|---|---|---|
| නිකුත් කරන දිනය | ... | 1977.08.10 |
| වටිනාකම | ... | රු. 1.00 |
| සැලසුම්කරු | ... | ඒ. රාසයියා |
| වර්ණ | ... | කළු, නිලට හුරු කොළ මැජෙන්ටා සහ කහ |
| හැඩය | ... | සිරස් |
| ප්‍රමාණය | ... | මි.මී. 36×30 |
| මුද්‍රණකරුවෝ | ... | සීමාසහිත, වොපෑන් මුද්‍රණ සමාගම, ජපානය |
| මුද්‍රණ ක්‍රමය | ... | අනුකෘත (ඕෆ්සෙට්) |
| පත් සැකැස්ම | ... | මුද්දර 100 බැගින් |
| භාවිත කඩදාසි | ... | එක් පසෙක ආලේපිත කැපැල් මුද්දර සඳහා සුදුසු 104.7 ජී.ඇස්.ඇම්. කඩදාසි |
| මැලියම | ... | නිවර්තන කලාපීය දේශගුණයට හැල පෙන විශේෂ ඇලෙනසුලු මැලියම |

## මුල් දින කවර

මුල් දින කවරයක් මුද්දර කාර්යාංශය මගින් නිකුත් කෙරෙන අතර එය විශේෂ අත් දින මුද්‍රාවෙකින් දින මුද්‍රා තැබීමට කටයුතු සලසා ඇත.

## විකිණීමේ කොන්දේසි

මුද්දර සහ මුල් දින කවර සැපයීම සඳහා වූ ඇණවුම් මුද්දර කාර්යාංශයේ අධ්‍යක්ෂට මාරු කළ හැකි ලෙස ලියන ලද තැපැල් ඇණවුම්, මුදල් ඇණවුම හෝ චෙක්පත් සමග "අධ්‍යක්ෂ, මුද්දර කාර්යාංශය, සිව්වැනි මහල, සෙලින්කෝ මන්දිරය, කොළඹ 1", යන ලිපිනයට සම්පූර්ණ විස්තර සහිතව එවිය යුතුය.

முத்திரைச் செய்தித்தாள் இல. 56

அஞ்சல் தொலைத்தொடர்பு அமைச்சு
புதிய க. தொ. சே. கட்டடம்,
டியூக் வீதி, கொழும்பு 1,
பங்குனி 10, 1977.

இந்நாட்டில் பல துறைகளிலும் முன்னோடியாகத் திகழ்ந்தவர் பொன்னம்பலம் அருணாசலம். இவர் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் இலங்கைச் சிவில் சேவைக்குத் தெரிவு செய்யப்பட்ட முதல் இலங்கையர். அத்துடன் தேசிய மதிப்பு வாய்ந்த ஆசியாக் கண்டத்தவர் சபையின் (இலங்கைக்கிளை) தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட முதல் இலங்கையருமாவார். இலங்கைப் பல்கலைக் கழகச் சங்கம், இலங்கைச் சீர்திருத்தச் சங்கம், இலங்கைத் தேசிய காங்கிரஸ், இலங்கை சமூக சேவைச் சங்கம், இலங்கைத் தொழிலாளர்கள் நலன்புரிச் சங்கம், இலங்கைத் தொழிலாளர்கள் சம்மேளனம் ஆகியவற்றின் முதல் தலைவராகவும் இவர் தெரிவுசெய்யப்பட்டார். இலங்கைக்குப் பல்கலைக்கழகம் தேவை; நமது பாடசாலைகளில் சுயபாஷையும், உள்ளூர் சரித்திரமும், பூமிசாத்திரமும் போதிக்கப்படுதல் வேண்டும்; அரசியல் சுதந்திரம் அளிக்கப்படல் வேண்டும்; தாழ்த்தப்பட்டோருக்கு உரிமைகளை வழங்குதல் வேண்டும் ஆகியன போன்ற இயக்கங்களுக்கு அவர் தலைமை தாங்கி நடாத்தினார்.

1853 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி கொழும்பில் பிறந்த அருணாசலம், கொழும்பு கலைக்கழகத்திலும் (றோயல் கல்லூரியின் முன்னைய பெயர்) கேம்பிரிட்ஜ் கிறிஸ்ட்ஸ் கல்லூரியிலும் கல்வி பயின்றார். இங்கிலாந்தில் தனது பட்டப் படிப்பினைப் பூர்த்தி செய்து, மாவழக்கறிஞர் பட்டத்தினையும் பெற்ற பின்னர், 1875 ஆம் ஆண்டு இலங்கை திரும்பிய இவர் பல்வேறுபட்ட நீதி, நிருவாகப் பதவிகளை அரசாங்கசேவையில் வகித்த பின்னர், 1913 ஆம் ஆண்டு சேவையிலிருந்து இளைப்பாறினார். இலங்கையில் சிவில் உத்தியோகத்தராகச் சிறந்த சேவையாற்றியமைக்காக இவருக்கு வீரத்திருந்தகைப் பட்டம் வழங்கப்பட்டது.

அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறிய இவர், தனது முழு சக்தியினையும் ஒன்றுதிரட்டி, அரசியல், கல்வி, சமூகச் சீர்திருத்தப் போராட்டங்களில் ஈடுபட்டார். 1915 ஆம் ஆண்டு சமூகசேவைச் சங்கத்தையும், 1917 ஆம் ஆண்டு இலங்கைச் சீர்திருத்தச்

சங்கத்தையும் ஆரம்பித்து வைத்தார். ஒரு தேசிய அரசியல் இயக்கமொன்றினை ஆரம்பிக்க வேண்டுமென்ற நோக்கத்தையுடைய பல்வேறுபட்ட அரசியல் இயக்கங்களையும் இவர் ஒன்று சேர்த்து, 1919 ஆம் ஆண்டில் இலங்கைத் தேசிய காங்கிரஸை உருவாக்கி, அதன் முதற்றலைவராகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். இதே ஆண்டில், இலங்கைத் தொழிலாளர்கள் சம்மேளனமும் இவரின் முயற்சியினால் தோன்றியது. இந்நாட்டில் தோன்றிய முதல் தொழிலாளர் சங்கம் இதுவென வர்ணிக்கப்படுகிறது. எனவே, இவரை இலங்கையில் தொழிற்சங்க இயக்கங்களின் தந்தையெனவும் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

இலங்கையில் ஒரு பல்கலைக்கழகம் இருக்கவேண்டுமென்பதே இவரின் அழியாத ஆசைகளிலொன்றாக இருந்தது. இலங்கையில் ஒரு பல்கலைக்கழகம் இருத்தல் வேண்டுமென்ற இயக்கத்தின் பொதுக்கூட்டமொன்றுக்கு 1906 ல் இவர் தலைமைவகித்து, இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கமொன்று உருவாகுவதற்கு வழி வகுத்து, அவ்வியக்கத்தினைத் தொடர்ந்து நடாத்தினார். 1924ம் ஆண்டில் இவர் மறைந்தபொழுது, இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியின் முதல் அதிபராகிய பேராசிரியர் மார்ஸ் பின்வருமாறு கூறினார். "இந்நாட்டில் அரசியல் முன்னேற்றத்துக்கு பல்கலைக்கழகமொன்று தேவையென்ற தெளிவான கருத்துடனும், ஒரே குறிக்கோளுடனும், அழியாத ஆர்வத்துடனும் இவரைப்போன்று இத்தீவில் வேறொருவரும் பல்கலைக்கழகத்துக்காக வாதாடவில்லை"

அருணாசலம் ஒரு சிறந்த அறிஞருமாவார். "ஆசியாவில் நாங்கள் சந்தித்த மிகுந்த அறிவுடைய, பண்பான தன்மைகளுடைய மனிதர்களில் ஒருவர்" என கேணல் ஒல்கொட் இவரை வர்ணித்துள்ளார். அப்பொழுது இவருக்கு வயது முப்பதாகும். இவரின் 1901ஆம் ஆண்டு குடிசனமதிப்பு அறிக்கையை "இலங்கையின் மனித இன வேறுபாடுகள், இலங்கையிலுள்ள மக்கள், அவர்களின் வரலாறு, மதங்கள், மொழிகள், இலக்கியங்கள் ஆகியன பற்றிய மிக விரிவான நூல்" என லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை வருணித்தது. இவர் 1906 ஆம் ஆண்டில் எழுதிய இலங்கை வரலாற்று நூல், அக்காலத்தில் பாடசாலைகளில் இலங்கை வரலாறு போதிக்கப்படாதிருந்தமையினால், மாணவர்களிடையே இப்பாடத்தில் ஒரு விருப்பத்தை ஏற்படுத்துவதற்காக எழுதப்பட்ட முதல் வரலாற்று நூலாகும். 1910 ஆம் ஆண்டில் இவர் வெளியிட்ட "இலங்கைச் சிவில் சட்டத்தின் தொகுப்பு", பரந்து கிடந்த எமது சட்டத்தின் சுருக்கமான ஒரு சட்டத் தொகுப்பாகும்.

மக்களிடையே அரசியல், சமூக பொருளாதார அபிவிருத்திகளை ஏற்படுத்துவதற்காக மக்கள் கழகங்களைத் தாபிக்கும் நோக்கத்துடன் இவரினாலும் திரு. எவ். ஆர். சேனநாயக்காவினாலும் 1919ல் கூட்டப்பட்ட மாநாடொன்றில் இவர் சிங்களத்தில் உரை நிகழ்த்தினார். இவ்வியக்கம் இலங்கை மகாஜன சபாதோன்றுவதற்கும் காரணமாகவிருந்தது.

இவர் வெளிநாட்டுப் பிரசுரங்களிலும், உள்நாட்டுப் பிரசுரங்களிலும் பல கட்டுரைகளை வெளியிட்டார். "வெஸ்ட்மினிஸ்டர் ரிவியூவில்" "ஒளி இகழ்கின்ற உறக்கம்" என்ற கட்டுரையையும் (1902) திரு. அ. ரயிற் அவர்களின் "இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு எண்ணப் பதிவுகள்" என்ற நூலில் (1907) "மக்கள் தொகை, இத்தீவின் இனங்கள், சமயங்கள், இலக்கியம், சாதிகள், வழக்கங்கள்" என்ற கட்டுரையையும், "ஜேர்னல் ஒவ் தி றோயல் ஏசியாற்றிக் சொசைட்டி (சிலோன் பிரான்ச்)" என்ற சஞ்சிகையில் "கண்டி மாகாணங்கள் (1910) பொலன்னறுவை வெண்கலச் சிலைகளும் சைவவழிபாடும் குறியீட்டமைவும் (1915) 'கதிர்காமக் கடவுளாகிய முருகனின் அல்லது ஸ்கந்தரின் வணக்கம்' (1924) என்ற கட்டுரைகளையும் எழுதினார். இவர் தனது சிநேகிதனாகிய எவ். எல். வூட்வேட் மொழிபெயர்த்த "தம்மபத" நூலுக்கு (1921) முகவுரையும் எழுதினார்.

அருணாசலம் 1924 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி மறைந்தார். பாராளுமன்ற நிலத்தளத்தில் நிறுவப்பட்ட முதற் சிலை இவரதாகும். இது 1930 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இவரது பெயரில் முதன்முதலாக பல்கலைக் கழகக் கல்லூரி விடுதியொன்று கொழும்பிலும் (1922) பல்கலைக்கழக விடுதி மண்டபம் ஒன்று பேராதனையிலும் (1950) தாபிக்கப்பட்டது. பிரித்தானியர் இந்நாட்டினை ஆட்சிபுரிந்த உச்சக் காலத்தில் இந்நாட்டின் அரசியல், கலாசார முன்னேற்றத்துக்கு அயராதுழைத்த அருணாசலத்துக்கும் அவரது சகோதரர் சேர். பொன்னம்பலம் இராமநாதனுக்கும், பெற்றோரின் நேருடன் பிறந்தோரின் பிள்ளையாகிய கலாநிதி ஆனந்தா கே. குமாரசுவாமிக்கும் இலங்கை பெரிதும் கடன்பட்டிருக்கிறது.

## தொழில்நுட்ப விவரங்கள்

| | | |
|---|---|---|
| வழங்கும் திகதி | : | 1977.03.10, |
| இனப்பெறுமதி | : | ரூபா 1/- |
| நிறங்கள் | : | கறுப்பு, நீலம், சிவப்பு, மஞ்சள் |
| வடிவமைப்பு | : | செவ்வகத்தானது. |
| அளவு | : | 36 × 30 மி.மீ., |
| அச்சாளர் | : | தொப்பான் பிரிண்டிங் கொ. லிமிரெட், ஜப்பான். |
| அச்சடிக்கும் முறை | : | எதிர்யடிவு. |
| தாளமைப்பு | : | தாளொன்றுக்கு 100 முத்திரைகள். |
| தாள் | : | ஒரு பக்கம் வண்ணம் பூசப்பட்ட தாள். 104.7 ஜீ. எஸ். எம். |
| பசை | : | உஷ்ண வலய நாடுகளுக்கேற்ற விசேட பசை. |

## அலுவலக முதல்நாள் உறை

விசேடமாக வரையப்பட்ட முதல்நாள் உறையையும் ஒரு விசேட அஞ்சற் குறியையும் முத்திரைப் பணியகம் வழங்கும்.

## விற்பனை நியந்தனைகள்

புதிய முத்திரைகள், முதல்நாள் உறைகள் ஆகியவற்றை வழங்குவதற்கான கட்டளைகள், முழு விபரங்களுடன் பணிப்பாளர், முத்திரைப் பணியகம், 4 வது மாடி, சிலிங்கோ மாளிகை, கொழும்பு 1 என முகவரியிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். இத்துடன் முத்திரைப் பணிப்பாளருக்குச் செலுத்தற்பாலதான தபால் கட்டளை, சருவதேச காசுக்கட்டளை அல்லது காசோலை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ශ්‍රී ලංකා රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුව